Kanton Bern
Canton de Berne

# பேர்ண் மாநில டொச் பேசும் பகுதியிலுள ள கட்டாய பாடசாலை

## பெற்றோர்களுக்கான தகவல்கள

Elterninformation zur Volksschule Tamilisch

Bildungs- und Kulturdirektion

**உள்ளடக்கம்**

அறிமுகம் ........................................................................ 3

கட்டாய பாடசாலை .............................................................. 4

கட்டாய பாடசாலையின் ஒழுங்கமைப்பு .................................. 5

ஊக்கமளித்தல் மற்றும் உதவிசெய்தல் ................................ 10

பெற்றோர் மற்றும் கட்டாய பாடசாலை ................................. 12

பொறுப்புவகிப்பது ................................................................ 15

## Impressum

Herausgeberin und Copyright:
Bildungs- und Kulturdirektion
Amt für Kindergarten, Volksschule und Beratung
akvb.bkd@be.ch

Auflage 2022
Download: www.be.ch/volksschule

## அறிமுகம்

இக் கைநூல் பேர்ண் மாநில பாடசாலை ஒழுங்குமுறை குறித்து தகவல்களை வழங்குகின்றது. அத்துடன் இது பின்வரும் கேள்விகளுக்கு விடையளிக்கின்றது:

– பாலர்பாடசாலை மற்றும் பாடசாலை எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது?
– பாடசாலை பெற்றோர்களிடமிருந்து எதை எதிர்பார்க்கின்றது?
– தமது பிள்ளைகள் பாடசாலையில் திறமையான உணர்வைப் பேணவும் நன்கு கற்பதற்கும் பெற்றோரால் என்ன செய்ய முடியும்?

ஆசிரியர்கள் மற்றும் நகரப் பாடசாலை அதிபர்கள் மேலதிக தகவல்களை வழங்க விருப்புடன் ஆயத்தமாக உள்ளனர்.

## கட்டாய பாடசாலை

### பொதுவானவை
### Allgemeines

கட்டாயமாகப் பாடசாலை செல்ல வேண்டிய காலம் வழமையாக பதினொரு வருடங்களாகும்.

குறிப்பிட்ட வருடத்தில், பிள்ளை 31. ஆடி வரை நான்கு வயதை அடைந்திருந்தால், கட்டாய பாடசாலைக் காலம் ஆரம்பமாகும் (இருவருட பாலர்பாடசாலை). பெற்றோர் விரும்பினால், தமது பிள்ளையை ஒரு வருடத்தின் பின்பாகவும் முதலாவது பாலர் பாடசாலை வருடத்திற்கு செல்ல வைக்க முடியும்.

பாடசாலை, மாணவ மாணவிகளுக்கு கற்கும் பொருட்கள் மற்றும் பாடசாலை உபகரணங்களை இலவசமாக வழங்கும்.

பெண்பிள்ளைகள் மற்றும் ஆண்பிள்ளைகள் ஒன்றுசேர்த்துக் கற்பிக்கப்படுவார்கள். இரு பாலாருக்கும் ஒரேவிதமான கற்கும் குறிக்கோள் அமைந்திருக்கும்.

கட்டாயபாடசாலை மத சார்பற்றதாகும்.

ஒவ்வொரு நகரத்தின் பாலர்பாடசாலை மற்றும் பாடசாலையை இயக்குவதற்கான பாடசாலை மேற்பார்வைக்குழுவும் மற்றும் பாடசாலை அதிபரும் பொறுப்பு வகிப்பார்கள்.

பெற்றோர் தமது பிள்ளையை ஒரு தனியார் பாடசாலைக்கு அனுப்ப விரும்பினால், பெற்றோரே பாடசாலைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

பிள்ளைகள் மற்றும் இளையோரை, ஒரு இயலாமை காரணமாக கட்டாயபாடசாலையில் சேர்க்க முடியாதிருந்தால், அவர்கள் ஒரு விசேட பாடசாலைக்குச் செல்ல வேண்டும்.

### கட்டாய பாடசாலையின் குறிக்கோள்கள்
### Ziele der Volksschule

கட்டாய பாடசாலை அறிவையும் திறன்களையும் கற்க வைக்கின்றது. இது பிற்கால தொழிற்கல்விக்கு, உயர்கல்வி கற்கும் பாடசாலை செல்வதற்கு மற்றும் வாழ்நாளில் கற்பதற்கு அடித்தளமாக அமைகின்றது. அத்துடன் பாடசாலையானது திறன்களை வளர்ப்பதற்குப் பங்களிப்புச் செய்வதுடன், ஒருவர் ஒருவரில் அக்கறை மற்றும் சகிப்புத்தன்மையை வளர்ப்பதுடன், சக மனிதர்கள் மற்றும் சுற்றுச்சூழலுடன் மிகப் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள ஊக்கமளிக்கின்றது.

### பாடத்திட்டம் 21
### Lehrplan 21

பாலர்பாடசாலை தொடக்கம் 9.வது பாட-சாலை வருடம் வரை பாடத்திட்டம் 21 ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கும், இது அவர்களுக்குப் பாடங்களைத் திட்டமிட உதவிபுரியும்

.

## கட்டாய பாடசாலையின் ஒழுங்கமைப்பு

| | | | |
|---|---|---|---|
| | **மத்தியதரம் II**<br>**Sekundarstufe II**<br>தொழிற்கல்வி அல்லது நடுத்தரப் பாட-சாலை<br>(உ-ம். தொழிற்கல்வி அல்லது கிம்நாசியம்) | 2–4 வருடங்கள் | |
| கட்டாய பாடசாலை<br>Volksschule | **மத்தியதரம் I (7.–9. பாடசாலைவருடம்)**<br>**Sekundarstufe I**<br>மத்தியதரநிலை<br>அல்லது<br>நியால் பாடசாலைத்தரநிலை | 3 வருடங்கள் | |
| | **ஆரம்பத்தரம் (1.–6. பாடசாலைவருடம்)**<br>**Primarstufe** | 6 வருடங்கள் | ஆரம்பதரம் 4 வருடங்கள் |
| | **பாலர்பாடசாலை**<br>**Kindergarten** | 2 வருடங்கள் | Basisstufe/<br>Cycle élémentaire<br>3–5 வருடங்கள் |

**பாலர்பாடசாலை**
**Kindergarten**

முதலாவது மற்றும் இரண்டாவது பாலர் பாடசாலை வருடப்பிள்ளைகள் ஒரே வகுப்பில் ஒன்றாகக் கற்பிக்கப்படுவார்கள். பாலர்பாடசாலை பிள்ளைகளுக்கு வாழ்வியல்-, விளையாட்டு- மற்றும் அனுபவப் பயிற்சிகளை வழங்கும். அதன் குறிக்கோளாக, விருத்தியடைய வைப்பது மற்றும் கற்பதைத் தூண்டுவது மற்றும் ஊக்கமளிப்பதாக இருக்கும். இதன்போது வித்தியாசமான கற்கும் முன் நிபந்தனைகள் மற்றும் திறமைகள் அதே போன்று கற்கும் வேகம் கவனத்தில் எடுக்கப் படும்.

இருவருட பாலர்பாடசாலையின் பின்பு பொதுவாக அனைத்துப் பிள்ளைகளும் ஆரம்பப் பாடசாலையின் முதல் பாடசாலை வருடத்திற்குச் செல்வார்கள். ஒரு பிள்ளையின் விருத்தி நிலையைப் பொறுத்து விதிவிலக்காக ஒரு வருடம் முன்பாகவோ அல்லது ஒரு வருடம் பின்பாகவோ ஆரம்பப் பாடசாலையின் முதல் பாடசாலை வருடத்திற்குச் செல்லலாம்.

சில நகரங்களில் பாலர்பாடசாலைப் பிள்ளைகள் மற்றும் முதல் இரு பாடசாலை வருடப் பிள்ளைகளுடன் முழுவதுமாக அல்லது பகுதியாக ஒன்றுசேர்த்து (வயதில் கலந்தவர்களாக) Basisstufe அல்லது Cycle élémentaire இல் கற்பிக்கப்படுவார்கள்

## ஆரம்பத்தரம் (1.–6. பாடசாலைவருடம்)

## Primarstufe (1.-6. Schuljahr)

1. தொடக்கம் 6. வது பாடசாலை வருடத்தில், மாணவிகள் மற்றும் மாணவர்கள் வித்தியாச மான துறைசார் பகுதிகளில் உ-ம். «மொழி», «கணிதம்» அல்லது «வடிவமைத்தல்» கற்பிக்கப்படுவார்கள். இதன்போது மாணவி கள் மற்றும் மாணவர்கள் அதிகளவில் சுயாதீனமாக மற்றும் சொந்தப் பொறுப்புணர் வுடன் செயற்படக் கற்றுக்கொள்கின்றனர்.

3.வது பாடசாலை வருடம் தொடக்கம் மாணவிகள் மற்றும் மாணவர்கள் டொச் பேசும் மாநிலப் பகுதியில் முதலாவது பிற மொழியாக பிரெஞ்சையும், 5.வது பாடசாலை வருடத்தின்பின் ஆங்கிலத்தையும் கற்பார்கள்.

ஆரம்பத்தரத்தின் பின்பு பிள்ளைகள் மத்திய தரம் I இற்குச் செல்வார்கள். பிள்ளைகளுக் கும் பெற்றோர்களுக்கும் 5.வது பாடசாலை வருடத்தில் மத்தியதரம் I இற்கு ஏறிச் செல்லும் நடைமுறை குறித்து பாடசாலை விளக்கமாக அறியத்தரும்.

## மத்தியதரம் I (7.–9. பாடசாலைவருடம்)

## Sekundarstufe I (7.-9. Schuljahr)

மத்தியதரம் I இல் மாணவிகள் மற்றும் மாணவர்கள் றியால் பாடசாலைத்தர நிலைக்கு அல்லது மத்தியதர நிலைக்கு கற்பிக்கப்படுவார்கள். மத்தியதர நிலையில், றியால் பாடசாலைத்தர நிலையிலும் பார்க்க அதிகம் கற்கவேண்டிய தேவை இருக்கும்.

மாணவிகள் மற்றும் மாணவர்கள் ஆசிரி யர்களினால், எதிர்பார்க்கப்படும் விருத்திக்கு அமைவாக குறிப்பிட்ட நிலைக்கு பகிரப் படுவார்கள்.

மத்தியதரம் I இன் பாடத்திட்டத்தில் பொது வான கல்வியுடன், எதிர்காலக் கல்வியை- மற்றும் தொழில் குறிக்கோளை தேர்வு செய்வது முக்கியமானதாகும். இந்த முக்கியமான செயல்முறைக்கு பாடசாலை உதவி செய்யும். பெற்றோர், வகுப்பாசிரியர் மற்றும் தொழில் ஆலோசகர் (இலவசமாக) ஆகியோர் இளையோர் தமது தொழிலைத் தேர்வு செய்ய ஒன்றுசேர்ந்து ஆதரவை வழங்குவர்.

www.be.ch/biz

## கட்டாய பாடசாலையின் பின்பு

## Nach der Volksschule

கட்டாய பாடசாலைக் காலத்தின் பின்பு இளையோர் இரண்டு- தொடக்கம் நான்கு வருடங்கள் இடம்பெறும் தொழிற்கல்விக்கு அல்லது நடுத்தரப் பாடசாலைக்குச் செல்வார்கள்.

அடிப்படைத் தொழிற்கல்வி குறித்த மேலதிக தகவல்களுக்கு:
www.be.ch/berufsbildung

துறைசார் நடுத்தரப் பாடசாலை மற்றும் கிம்நாசியம் குறித்த தகவல்களுக்கு:
www.be.ch/mittelschulen

### பாடசாலை வருடம் மற்றும் பாடசாலை விடுமுறை

## Schuljahr und Schulferien

பாடசாலை ஆவணி மத்தியில் ஆரம்பமாகி ஆடி ஆரம்பத்தில் முடிவடையும். பிள்ளைகள் மற்றும் இளையோருக்கு ஒரு வருடத்தில் 38 அல்லது 39 கிழமைகள் பாடங்கள் இருக்கும். பாடசாலை வகுப்பு 39 கிழமை நடந்திருந்தால் இவ்வருட விடுமுறை பின்வருமாறு பகிரப் பட்டிருக்கும்:

- இலையுதிர்கால விடுமுறை புரட்டாதி, ஐப்பசி: மூன்று கிழமைகள்
- குளிர்கால விடுமுறை மார்கழி, தை: இரண்டு கிழமைகள்
- விளையாட்டு விடுமுறை: ஒரு கிழமை
- இளவேனிற்கால விடுமுறை சித்திரை: இரண்டு கிழமை
- கோடைகால விடுமுறை ஆடி, ஆவணி: ஐந்து கிழமைகள்

விடுமுறை நாட்கள் குறித்த சரியான விபரங் களை மற்றும் பாடசாலை இல்லாத பொது விடுமுறை நாட்களை பாடசாலை அல்லது நகர இணையத்தளத்தில் காணலாம்.

### நேரசூசிகை

## Stundenplan

பாடங்கள் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை நடைபெறும். ஒரு பாடம் 45 நிமிடங்களாக இருக்கும். காலையில் குறைந்தது 4 பாடங்கள் கற்பிக்கப்படும். கற்பித்தலின் ஆரம்பத்தில் மற்றும் முடிவில் ஒரேமாதிதியாக இருக்கும் (திட்டமிடப்பட்ட நேரம்). பின்நேரங்களில் பாட நேரம் வித்தியாசப்படும் (இரண்டு தொடக்கம் நான்கு பாடநேரங்கள்). ஒவ்வொரு பாடசாலை வருடங்கள் மற்றும் வகுப்புகளைப் பொறுத்து ஒரு அல்லது பல பின்நேரங்கள் பாடசாலை இல்லாது இருக்கும்.

உங்கள் பிள்ளை நேர-சூசிகைப்படி பாடங்க ளுக்கு வருவதற்கு பெற்றோராகிய நீங்களே பொறுப்பானவர்களாகும். பாடநேரங்களில் பிள்ளைகளைக் கண்காணிப்பது பாடசா லையின் பொறுப்பாகும்.

பாடங்கள் இல்லாத நேரங்கள் மற்றும் பாட- சாலை வழிகளில் பிள்ளைகளுக்குப் பெற்றோரே பாதுகாப்பு வழங்கவேண்டும். விதிவிலக்காக: பாடசாலைக்கான வழி கடினமாக இருக்குமாயின், மாணவ மாணவி களுக்கு பாடசாலையால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு போக்குவரத்து வசதி செய்யப்படும்.

## வராதிருத்தல் மற்றும் விடுமுறை எடுப்பது

## Absenzen und Dispensationen

ஒரு பிள்ளை அறிவித்தல் கொடுக்காமலோ அல்லது பாடசாலை நிர்வாகத்தின் அனுமதி இன்றியோ பாடங்களுக்கு வராமல் இருக்கக் கூடாது. வராத வேளையில் நீங்கள் ஆசிரியர் களுக்கு நேரகாலத்துடன் ஆகக் குறைந்தது பாடம் ஆரம்பிப்பதற்கு முன்பாக அறிவிக்க வேண்டும். வராமலிருப்பதற்கான அறிவித்தல் கொடுக்கும் காரணங்கள்: பிள்ளையின் சுகவீ னம், குடும்பத்தில் இறப்பு, வீடு மாற்றம், வைத்தியர் அல்லது பல்வைத்தியரிடம் செல்லுதல்.

பெற்றோர்கள் தமது பிள்ளையை ஒரு பாட-சாலை வருடத்திற்கு ஐந்து அரைநாட்கள் எவ்வித காரணமும் காட்டாமல் பாடசாலைக்கு அனுப்பாமல் விடலாம். ஆனால் இதுகுறித்து ஆசிரியர்களுக்கு முன்பாகவே அறிவிக்க வேண்டும்.

சமய திருவிழாக்களைக் கொண்டாடுவது, முக்கிய குடும்ப நிகழ்வு, தாய்மொழி வகுப் பிற்கு மற்றும் கலாச்சார நிகழ்வுகளுக்குச் (HSK) செல்வது, ஒரு தொழில் அறிமுகப் பயிற்சியை மேற்கொள்வது போன்றவற்றிற்கு பாடசாலை நிர்வாகத்தால் விடுமுறை அனுமதி வழங்கப்படும். இவ்வாறான விடுமுறையைப் பெறுவதற்கு நேரகாலத்துடன் பாடசாலை நிர்வாகத்திற்கு அறிவிக்க வேண்டும்.

## வீட்டுப்பாடங்கள்

## Hausaufgaben

பாடசாலையில் கற்பது பாடவேளைகளாக இருக்கும். வீட்டுப்பாடங்கள், பாடங்களை முன்பாக- மற்றும் பின்பாகத் தயார்படுத்துவ தற்கு உதவுகின்றது. ஒரு பிள்ளை பெற் றோரது அல்லது வேறொரு வயதுவந்த நபரின் உதவியின்றி வீட்டுப்பாடம் செய்துகொள்ள முடியும்.

ஒரு கிழமைக்கு ஆகக் கூடுதலான வீட்டுப்பாட நேரம்:

- 30 நிமிடங்கள் 1./2. பாடசாலை வருடத்திற்கு
- 45 நிமிடங்கள் 3. தொடக்கம் 6. பாடசாலை வருடம் வரை
- 90 நிமிடங்கள் 7. தொடக்கம் 9. பாடசாலை வருடம் வரை

ஒவ்வொருவரின் கற்கும்- மற்றும் திறமை-களின் அளவைப் பொறுத்து ஆசிரியர்கள் வீட்டுப்பாடத்தைத் தீர்மானிப்பார்கள்.

## மதிப்பீடு

### Beurteilung

அனைத்திலும் முதலாக மதிப்பீடு ஊக்க மளிப்பதற்கு உதவுவதுடன் பிள்ளை தான் சொந்தமாகக் கற்பதை அறிந்து கொள்ள உதவுகின்றது.

ஒவ்வொரு பாடசாலை வருடத்திலும் வகுப் பாசிரியர் பெற்றோரை ஒரு கலந்துரையாட லுக்கு அழைப்பார் (பெற்றோர் ஆசிரியர் கலந்துரையாடல்). இக் கலந்துரையாடலில் மாணவ மாணவிகளின் பாடசாலைத் திறன் கள் மற்றும் கற்கும்- மற்றும் விருத்தி நிலை குறித்து உரையாடப்படும். பெற்றோர் அல்லது பாடசாலை விரும்பினால் மேலதிக கலந்துரை யாடல்கள் நடத்தப்படும்.

மாணவிகள் மற்றும் மாணவர்கள் 2வது பாட- சாலை வருட முடிவில் அதேபோன்று 4. தொடக்கம் 9. பாடசாலை வருட முடிவு வரை எழுத்து வடிவமான மதிப்பீட்டு அறிக் கையைப் பெற்றுக்கொள்வார்கள். அதில் பல்வேறு பாடங்களில் உள்ள திறமைகள் குறித்து மதிப்பீடு வழங்கப்பட்டிருக்கும். 4.வது பாடசாலை வருடம் தொடக்கம் மாணவ மாணவிகளின் மதிப்பீட்டு அறிக்கையில் திறமைகளுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.

## ஊக்கமளித்தல் மற்றும் உதவிசெய்தல்

### உதவும் நடவடிக்கைகள்
**Unterstützende Massnahmen**

பிற மொழிப் பின்னணியுடைய பிள்ளைகள் மேலதிகமாக இரண்டாவது மொழியாக டொச் பாடத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.

ஒரு பிள்ளை விதிவிலக்காக அறிவுத்திறன் கொண்டாதாக இருந்தால், அது தெளிவு படுத்தப்பட்ட பின்னர் திறமைகளை ஊக்குவிக்கும் வாய்ப்புகளுக்குச் செல்லலாம்.

### கற்பதில் பிரச்சினைகள்
**Lernschwierigkeiten**

பிள்ளைக்கு கற்பதில் பிரச்சினைகள் இருந்தால், பெற்றோரின் சம்மதத்துடன், ஒரு துறைசார் நபர் ஊடாக அல்லது ஒரு துறைசார் நிலையம் (மாநில வளர்ப்பு ஆலோசனை) ஊடாகத் தெளிவுபடுத்தப்படும்.

www.be.ch/erziehungsberatung

### சாதாரண சிறப்புக் கல்வி நடவடிக்கைகள்
**Einfache sonderpädagogische Massnahmen**

சாதாரண சிறப்புக் கல்வி நடவடிக்கைகளான ஒருங்கிணைந்த ஊக்குவிப்பு, பேச்சு சிகிச்சை, மனரீதியாக இயங்கும் ஊக்கம் போன்றவை, மாணவ மாணவிகள் வழமையான பாடசாலைகளுக்குச் செல்ல உதவிசெய்யும்.

1.வது பாடசாலை வருடத்திலுள்ள பிள்ளைகளுக்கு, பாடவிதானங்களில் சற்று மேலதிகமான நேரம் தேவைப்பட்டால், அந்தப் பாடங்களை அவர்கள் இரு வருடங்கள் கற்கலாம்.

தற்சமயம் பிள்ளைகள் கற்கும் நோக்கத்தை உதவிகள் பெற்றும் அடையாவிட்டால், அவர்களுக்குத் தனிப்பட்ட வகையில் கற்கும் குறிக்கோளுக்கு அமைவாகக் கற்பிக்கப்படும் மற்றும் மதிப்பிடப்படும்.

### விசேட வகுப்புகள்
**Besondere Klassen**

ஆரமப்பத்தரம் அல்லது மத்தியதரம் I இல் கற்பதற்கு பிரச்சினை இருக்கும் பிள்ளைகளுக்கு, ஒரு விசேட வகுப்பிற்குச் செல்வதற்கு பல நகரங்களில் சந்தர்ப்பமுள்ளது. இவ்வாறான ஒரு விசேட வகுப்பில் குறைவான மாணவ மாணவிகளே இருப்பார்கள். அதனால் ஆசிரியர்கள் கற்பிக்கும்போது பிள்ளைகளுக்கு நன்றாக உதவி வழங்க முடியும்.

### அதிகரித்த சிறப்புக் கல்வி நடவடிக்கைகள
**Verstärkte sonderpädagogische Massnahmen**

இந்த ஊக்குவிக்கும் வாய்ப்புகள் ஊடாக போதியளவில் கற்றுக்கொள்ள முடியாத பிள்ளைகளுக்கு, அதிகரித்த சிறப்புக் கல்வி நடவடிக்கைகள் எனும் பாடத்திட்டம் உள்ளது - இதற்காக வழமையான மக்கள் பாடசாலைகள் அல்லது விசேட மக்கள் பாடசாலைகள் உள்ளன.

### பாடசாலை சமூகசேவை
**Schulsozialarbeit**

பாடசாலை சமூகசேவையாளர், பிள்ளைகள் மற்றும் இளையோருக்கு சமூக அல்லது தனிப்பட்ட பிரச்சினைகளின்போது உதவி வழங்குவார்கள். ஆசிரியர்கள், பாடசாலை அதிபர் மற்றும் பெற்றோரும் நிச்சயமாக பாட-சாலை சமூகசேவையை நாடலாம்.

## முழுநாள் பாடசாலை
## Tagesschule

பாடநேரங்களுக்கு அப்பால் ஒரு பராமரிப்புத் தேவைப்படும் பிள்ளைகளுக்கு, நகரங்கள் முழுநாள் பாடசாலை வசதியை வழங்கு கின்றன:

- பாடநேரங்களுக்கு முன்பான பராமரிப்பு
- மதிய பராமரிப்பு உணவுடன்
- பாடநேரம் முடிந்த பின்பான அல்லது பாட-சாலை இல்லாத மாலைநேரங்களிலான மாலைநேரப் பராமரிப்பு

முழுநாள் பராமரிப்புவசதி பெற்றோரின் சொந்த விருப்பாகும். இதற்குச் செல்வதற்கான கட்டணம் பெற்றோர்களுக்கு அவர்களின் வருமானம், சொத்துக்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் தொகை முதலியவற்றால் வித்தியாசப்படும்.

முழுநாள் பாடசாலை குறித்த பொதுவான தகவல்களுக்கு:
www.be.ch/schulergaenzende-angebote

பெற்றோர்கள் தாம் வசிக்கும் நகரத்திலுள்ள முழுநாள் பாடசாலை குறித்த தகவல்களை வகுப்பாசிரியரிடம், பாடசாலை அதிபரிடம் அல்லது நகரநிர்வாகத்திடம் பெற்றுக் கொள்ளலாம்.

பிள்ளைகள் பராமரிப்புக் குறித்த வேறு வசதிகளுக்கான தகவல்களை (பிள்ளைகள் காப்பகம், நாள் பராமரிப்புப் பெற்றோர்

போன்றது) நகரநிர்வாகத்திடம பெற்றோர் பெற்றுக்கொள்ளலாம்:
www.fambes.sites.ch

## உடல்நலம்
## Gesundheit

பிள்ளைகள் மற்றும் இளையோர் பாலர்பாட-சாலையிலும் அதேபோன்று 4. மற்றும் 8. வது பாடசாலைவருடத்திலும் வைத்திய பரிசோ தனை செய்யப்படுவார்கள். இந்தப் பரிசோ தனை கட்டாயமானது என்பதுடன் பெற்றோரி டமிருந்து எவ்வித கட்டணமும் பெறப்பட மாட்டாது.

ஒவ்வொரு வருடமும் பிள்ளைகள் மற்றும் இளையோரின் பற்கள் பாடசாலை பல் வைத்தியரால் பரிசோதிக்கப்படும். இந்தப் பரிசோதனையும் இலவசமானதாகும்.

தற்சமயம் ஒரு பரிசோதனையின் பின்பு மேலதிக தெளிவுபடுத்தல்கள் அல்லது சிகிச்சை தேவைப்படின், அதுகுறித்துப் பெற்றோருக்கு அறிவிக்கப்படும்.

## பெற்றோர் மற்றும் கட்டாய பாடசாலை

### சேர்ந்து செயற்படுவது
**Zusammenarbeit**

பெற்றோர் மற்றும் கட்டாய பாடசாலை சட்டரீதியாக ஒன்றுசேர்ந்து செயற்படுவதற்கு கடமைப்பட்டுள்ளனர். இவ்வாறு ஒன்றுசேர்ந்து செயற்படுவதற்கு ஒழுங்கான தகவல் பரிமாற்றம் அத்துடன் ஒருவரை ஒருவர் விளங்கிக்கொள்தல், நம்பிக்கைகொள்தல் மற்றும் மதித்தல் முக்கியமானதாகும்.

### பரஸ்பர தகவல் பரிமாற்றம்
**Gegenseitige Information**

பாடசாலை பெற்றோருக்கு முக்கிய நிகழ்வுகள் மற்றும் பாடங்கள் மற்றும் அதனுடன் தொடர்பான விடயங்களை (நிகழ்ச்சிகள், பாட-சாலைப் பயணங்கள் போன்றவை) மற்றும் பாடசாலை செயற்பாட்டு விடயங்களை (வேறு பாடசாலைக்கு அல்லது வகுப்புக்கு அனுப்பு வது, பாட நேரங்கள், கற்கும் உபகரணங்கள், பாடசாலை விதிகள் போன்றவை) அறிவித்துக் கொள்ளும். இந்தத் தகவல்கள் எழுத்து மூலமாகவோ அல்லது பெற்றோர் கலந்துரை யாடலின்போதோ வழங்கப்படும்.

பெற்றோர் குடும்பம் மற்றும் பாடசாலை ஒன்றுசேர்ந்து செயற்படுவதற்கு கலந்துரை யாடல் ஒரு நடுமையமாகத் திகழ்கின்றது.

ஆசிரியர்களுக்கு அறிவித்தபின்பு பெற்றோர் எவ்வேளையிலும் பாடவேளைக்கு வருகைதர அனுமதியுண்டு.

பிள்ளை நோயால் தாக்கப்பட்டாலோ அல்லது ஒழுங்காக மருந்துகளை எடுக்க வேண்டி இருந்தாலோ அல்லது பிள்ளையின் விருத்தி யில் மற்றும் அவதானத்தில் தாக்கங்களை ஏற்படுத்தும் நிகழ்வுகள் ஏதாவது இடம் பெற்றிருந்தாலோ அதுகுறித்து வகுப்பாசிரிய ருக்கு அறியத்தருமாறு பெற்றோர்கள் கேட்கப்படுகின்றனர்.

### மொழிபெயர்ப்பு
**Übersetzung**

பெற்றோர் சந்திப்பிலோ அல்லது ஒரு கலந்துரையாடலிலோ என்ன கதைக்கப்படு கின்றது என்பதை பெற்றோர் விளங்கிக் கொள்வது அவசியமானதாகும். அத்துடன் பெற்றோர் தமது விருப்புகளை வெளிப்படுத் துவது மற்றும் தமது கேள்விகளைக் கேட்பது முக்கியமானதாகும். தற்சமயம் பெற்றோர் டொச் அல்லது பிரெஞ்சை குறைவாகக் கதைப்பார்களானால், ஒரு ஆண் அல்லது பெண் மொழிபெயர்ப்பாளரை ஒழுங்கு பண்ணுமாறு கேட்கலாம்.

### முக்கிய முடிவுகள்
**Wichtige Entscheide**

பிள்ளையின் பாடசாலைக்காலத்தில் எடுக்கப் படும் அனைத்து முக்கிய முடிவுகள் குறித்து (உதாரணமாக ஆரம்பத்தரத்தில் இருந்து மத்தியதரம் I க்கு ஏறிச்செல்லுதல் அல்லது ஒரு விசேட வகுப்பிற்கு அனுப்புதல்) பிள்ளை மற்றும் பெற்றோருடன் கதைக்கப்படும்.

பெற்றோருக்கு, பிள்ளையின் ஆசிரியர்களிடம் மற்றும் அதிபரிடம் இருந்து அறிந்து கொள்ள, கேட்டுக்கொள்ள மற்றும் ஆலோசனை பெற உரிமை உள்ளது. அத்துடன் பெற்றோர் தமது பிள்ளை பற்றிய அனைத்துக் கோவைகளை யும் பார்வையிட அனுமதியுண்டு. பாடசாலை வாழ்வுப்பாதையை முடிவெடுத்தல் பாடசாலை அதிபரால் எழுத்து மூலமாகவும், காரணம் காட்டப்பட்டும் அனுப்பிவைக்கப்படும். இந்த முடிவை பெற்றோர் ஏற்றுக்கொள்ளாதுவிடின், 30 நாட்களுக்குள் தமது ஆட்சேபனையை பாடசாலைப் பரிசோதகரிடம் வழங்கலாம்.

## பெற்றோர் சேர்ந்து இயங்குதல்
## Mitwirkung der Eltern

பல பாடசாலைகளில் பெற்றோர் சங்கம் உள்ளது, இதில் ஒவ்வொரு வகுப்பிலும் இருந்து ஒரு அல்லது இரு பெற்றோர் பிரதிநிதிகள் பங்கேற்றிருப்பர். இவர்கள் பாட-சாலை வருடத்தின் ஆரம்பத்தில் வகுப்புப் பெற்றோரால் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். இந்தப் பெற்றோர் பிரதிநிதிகள் வகுப்பாசிரி யர்களுடன் மிக நெருக்கமாகச் சேர்ந்து செயற்படுவார்கள். பெற்றோர் சங்கம் பெற்றோ ருக்கும் பாடசாலைக்கும் இடையேயான தொடர்பைப் பேணிக்கொள்ளும்.

பாலர்பாடசாலையில் அல்லது பாடசாலையில் பெற்றோர் சேர்ந்து இயங்குதல் குறித்து பிள்ளையின் வகுப்பாசிரியரிடம் அல்லது பாட-சாலை அதிபரிடம் பெற்றோர் அறிந்து கொள்ளலாம்.

## கட்டாய பாடசாலையில் பிரச்சினைகள்
## Probleme in der Volksschule

சிலவேளைகளில் வகுப்பில் பிள்ளை விருப்ப மற்ற உணர்வுடன் இருக்கலாம், அல்லது அவரது திறமைகள் திடீரெனக் குறைவடை யலாம். சிலவேளைகளில் பிள்ளைக்கு வேறு பிள்ளைகளுடன் முரண்பாடுகள் ஏற்படலாம், அல்லது பெற்றோர் ஒரு ஆசிரியரின் முடிவை ஏற்றுக்கொள்ளாதிருக்கலாம்.

## பெற்றோர் இவ்வாறு நடந்து கொள்ளலாம்

1. பெற்றோர் மற்றும் ஆசிரியர் ஒருவரோடு ஒருவர் தொடர்பை ஏற்படுத்துவது. ஒன்றி ணைந்து நிலைமை குறித்து உரையாடு வதுடன் ஒரு தீர்வுக்கான வழியைத் தேடிக்கொள்வது. வழமையாகத் திருப்திப் படக்கூடிய தீர்வைக் கண்டுகொள்தல்.
2. தற்சமயம் பெற்றோர் மற்றும் ஆசிரியரால் தீர்வுகாண முடியாது, இருபகுதியில் ஒருவர் தேவையென்று கருதும் பட்சத்தில், பெற் றோர், ஆசிரியர் மற்றும் அதிபருக்கிடையே ஒரு கலந்துரையாடல் நடைபெறும்.
3. இதன்போது துறைசார் நிலையமான உ-ம். பாடசாலை சமூகசேவைப்பகுதி அல்லது கல்வி ஆலோசனை நிலையத்தை சேர்த் துக் கொள்ளலாம்.
4. ஒன்றுசேர்ந்து ஒரு முடிவை எட்ட முடிய வில்லையானால், பாடசாலை பரிசோதகரை நாடலாம்.

தேவைப்படின் பாடசாலை ஒரு மொழி பெயர்ப்பை ஏற்பாடு செய்யும்.

**பேர்ண் மாநிலத்திற்கு குடிவருவது**

**Zuzug in den Kanton Bern**

சுவிசில் வசிக்க ஆரம்பிக்கும் மற்றும் பல மாதங்கள் சுவிசில் வசிக்கவிருக்கும் 4 வயது தொடக்கம் 15/16 வயதான பிள்ளைகள் மற்றும் இளையோா் பாடசாலைக்குச் செல்லும் கடமைப்பாடு உடையவர்கள்,

புதிதாகக் குடிவரும் பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகள் பாலர்பாடசாலை- மற்றும் பாட-சாலை செல்வது குறித்த தகவல்களை தமது நகர நிர்வாகத்திடமிருந்து அல்லது வசிக்கும் நகரப் பாடசாலையின் இணையத் தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பிள்ளைகள் மற்றும் இளையோருக்கு, கற்பிக்கும் மொழி கடினமாக இருந்தால், மொழியைக் கற்பதற்கு மேலதிக உதவி வழங்கப்படும்.

13 வயதிற்கு மேற்பட்டு புதிதாகக் குடிவரு-பவர்களுக்கு இங்கு கற்பிக்கும் மொழி தெரியாதவர்களாயின் பிரதேச ரீதியான ஒரு விரைவாகக் கற்கும் வகுப்புக்குச் செல்லலாம். (Regionaler Intensivkurs PLUS, RIK+).

மேலதிக தகவல்களுக்கு:
www.bkd.be.ch/migration

## பொறுப்புவகிப்பது

### கல்வித் திணைக்களம்
**Bildungs- und Kulturdirektion**
கல்வித்திணைக்களம் மாநிலரீதியாக கல்விக் குப் பொறுப்பு வகிக்கும் திணைக்களமாகும். இது நகரங்களில் கட்டாய பாடசாலைக்கான நிபந்தனைகளைத் தீர்மானிப்பதுடன் பாடத் திட்டங்களை வெளியிடுகின்றது.

### பாடசாலைப் பரிசோதகர்
**Schulinspektorat**
ஆண் அல்லது பெண் பாடசாலைப் பரிசோ தகர் கட்டாய பாடசாலைகள் குறித்து மாநில ரீதியாகக் கண்காணித்துக் கொள்வார்கள்.

### நகரங்கள்
**Gemeinde**
நகரங்கள் உள்ளூரில் கட்டாய பாடசாலை களை ஒழுங்கமைப்பதற்குப் பொறுப்பு வகிக்கும். இவை பாடசாலைக் கட்டமைப் புக்குத் தேவையானவைகளை வழங்கும்: பாடசாலைக் கட்டடம், தளபாடங்கள் மற்றும் கற்பிக்கும் உபகரணங்கள்.

### பாடசாலை மேற்பார்வைக்குழு
**Schulkommission**
பாடசாலை மேற்பார்வைக்குழு*, பிள்ளைகள் மாநில சட்டவிதிகள் மற்றும் பாலர்பாடசாலை மற்றும் பாடசாலைக்கான நகர ஒழுங்கு விதிகளை மதித்து நடக்கின்றனரா என கண்காணித்துக் கொள்வார்கள். இதைவிடவும் கட்டாய பாடசாலை குறித்து அடிப்படை முடிவுகளை எடுப்பதற்கும் பொறுப்பு வகிக்கும்.

### பாடசாலை அதிபர்
**Schulleitung**
பாடசாலை அதிபர் கட்டாய பாடசாலையை இயக்குவதற்குப் பொறுப்பு வகிப்பார். அவரே வேறு பொறுப்புக்களுடன் பிள்ளைகளை ஒவ்வொரு வகுப்புகளுக்கும் பகிரச் செய்வதுடன் எதிர்காலப் பாடசாலை வழி நடப்புக் குறித்தும் முடிவு செய்வார்.

### வகுப்பாசிரியர்
**Klassenlehrperson**
வகுப்பாசிரியர் வகுப்பில் கற்பிப்பது மற்றும் ஒழுங்குபடுத்தி வழிநடத்துவதற்குப் பொறுப்பு வகிப்பார். அவரே பாலர்பாடசாலை மற்றும் பாடசாலைக்குச் செல்லும் உங்கள் பிள்ளை குறித்த அனைத்துக் கேள்விகள் மற்றும் விடயங்களுக்கான முதல் தொடர்பு நபராகும்.

* பாடசாலை மேற்பார்வைக்குழு சில நகரங்களில் கல்வி மேற்பார்வைக்குழு என அழைக்கப் படுகின்றது.

